

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கிணங்க வரும் ஜூன் 1ஆம் தேதி மதுரை உத்தங்குடியில் நடைபெற உள்ள கழக மாநில பொதுக் குழு கூட்டத்திற்கான முன்னேற்பாடுகளை கழக முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், ஈ.ராஜா மற்றும் கழக நிர்வாகிகள் கழகத்தினர் பங்கேற்றார்கள்.

### ஜூன் 1ல் கழக பொதுக்குழு நடைபெறும்

# மதுரை உத்தங்குடியில் பந்தல் அமைக்கும் பணி!

## பணிகளை அமைச்சர்கள் கே.என்.நேரு – பி.மூர்த்தி நேரில் ஆய்வு!

மதுரை, மே.14 -

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சென்னையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் வரும் ஜூன் 1ஆம் தேதி மதுரையில் பொதுக்குழு நடைபெறும் என தீர்மானிக்கப்பட்டது. இதை அறிந்ததும் மதுரை மாவட்ட தி.மு.க.வினர் மற்றும் பொதுமக்கள் பெரும் மகிழ்ச்சி கொண்டு உற்சாகத்துடன் உள்ளனர். இதற்கான பணிகள் மதுரை உத்தங்குடியில் நடைபெற்று வருவதை அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.மூர்த்தி நேரில் ஆய்வு செய்தார்கள்.

அதன் விபரம் வருமாறு:-

மதுரை உத்தங்குடியில் வரும் ஜூன் 1ஆம் தேதி கழக மாநில பொதுக்குழு கூட்டம் பிரம்மாண்டமாக, வெகு சிறப்பாக இந்தியாவே திரும்பி பார்க்கும் வகையில் நடைபெற உள்ளது.

பிரம்மாண்டமான முறையில் இதற்கான பணிகள் இரவு பகலாக நடைபெற்று வருகிறது. சிறந்த தொழில்நுட்ப வல்லுநர்களை கொண்டு நடைபெற்று வரும் பல்வேறு பணிகளை கழக முதன்மைச் செயலாளர் நகர்ப்புற உள்ளாட்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு, வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் நேரில் ஆய்வு செய்தார்கள்.

மேலும் மதுரையில் பொதுக்குழு நடைபெறும் என்று அறிவித்ததுடன் மதுரை மாவட்ட தி.மு.க.வினர் மற்றும் பொதுமக்கள் பெரும் உற்சாகம் கொண்டு கழகத்தினர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்று மகிழ்விக்க தயாராகி வருகின்றார்கள்.

மதுரை உத்தங்குடியில் நடைபெற உள்ள கழக பொதுக்குழு ஒரு வரலாறு சிறப்புமிக்க பொதுக்குழுவாக அமையும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை எனும் வகையில் ஏற்பாடுகள் சிறப்பாக செய்யப்பட்டு வருகின்றது.

அமைச்சர்கள் ஆய்வின் போது சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், ஈ.ராஜா மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர் உடன் இருந்தனர்.

# சங்கரன்கோவிலில் ரூ.14.08 கோடி மதிப்பிலான திட்டப்பணிகள்!

## அமைச்சர் கே.என்.நேரு துவக்கி வைத்தார்!

தென்காசி, மே.14–

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் ரூபாய் 9 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா புதிய பேருந்து நிலையம், புளியங்குடி நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 74 கடைகள் கொண்ட காந்தி தினசரி அங்காடி கட்டிடம் மற்றும் வாசுதேவநல்லூர் பேரூராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 1.08 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நவீன மாயமாக்கப்பட்ட பேருந்து நிலையம் ஆகியவற்றின் துவக்க விழா நிகழ்வில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று தென்காசி மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா, வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன் திருமலை குமார் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார். அதாவது மொத்தம் ரூபாய் 14.08.கோடி மதிப்பில் பணிகள் மக்கள் பயன்பாட்டிற்காக துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

சங்கரன்கோவிலில் நகராட்சி உள் கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்டத்தின் கீழ் ரூபாய் 9 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தின் துவக்க விழா நிகழ்வு பேருந்து நிலைய வளாகத்தில் தென்காசி மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் தலைமையில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் தென்காசியில் வடக்கு மாவட்ட செயலாளர் சங்கரன் கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. சங்கரன்கோவில் நகர்மன்ற தலைவர் உமா மகேஸ்வரி சரவணன் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று புதிய பேருந்து நிலையத்தினை துவக்கி வைத்து அங்கிருந்த பேருந்துகளை கொடியசைத்து துவக்கி வைத்தும் பேசியதாவது:–

திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற நான்காண்டு காலம் தமிழக மக்களுக்காக முதலமைச்சர் அவர்கள் சிறப்பாக பணியாற்றி வருகிறார். இந்தத் துறைக்கு 151 ஊராட்சிகளும், 490 பேரூராட்சிகள், 27 மாநகராட்சிகள் உள்ளது. முதல்வர் அவர்கள் ஆட்சியிலே நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சி என கூடுதலாக வந்துள்ளது. ஆண்டுதோறும் இதற்காக முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்க கூடிய தொகை இந்த ஆண்டு மட்டும் 26 ஆயிரம் கோடியாகும்.

கடந்த 10 ஆண்டு கால ஆட்சியில் இந்த பகுதியிலேயே அமைச்சர்கள் இருந்துள்ளனர். அப்போது நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்தோம் ஆனால் அவர்களால் இந்த தொகுதி வளர்ச்சி அடையவில்லை. ஆனால் ராஜா எம்.எல்.ஏ. தனது எளிய அணுகு முறையால் அனைத்து அமைச்சர்களிடம் கலந்து பேசி பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். இப்போது தான் வளர்ச்சிப் பணிகள் நடந்துள்ளது.

தலைவர் கலைஞராக இருந்தாலும், நம் தலைவர் ஸ்டாலினாக இருந்தாலும் அவர்களது ஆட்சியில்தான் தமிழகம் வளர்ச்சி அடைந்துள்ளது. எங்களைப் போன்றவர்கள் சேர்மனாக இருந்தபோது எங்களுக்கு நிதி கிடைக்கவில்லை. எங்களால் வேறு ஒன்றும் செய்யமுடியவில்லை. ஆனால் இன்றைக்கு நகராட்சி துறைக்கு 26 ஆயிரம் கோடி, ஊரக வளர்ச்சி துறைக்கு 31,000 கோடி வழங்கியிருக்கிறார் நம் முதல்வர் அவர்கள். 1972ல் குடிநீர் வடிகால் வாரியத்தை கலைஞர் அவர்கள் தொடங்கினார்கள். அன்று முதல் தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்கும் வரை 4 கோடியே 24 லட்சம் மக்களுக்குத்தான் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற 4 ஆண்டு காலத்தில் கூடுதலாக 3 கோடி மக்கள் பயன்பெறும் வகையில் 30 ஆயிரம் கோடி செலவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

கடையநல்லூர் நகராட்சி மற்றும் கடையம், கீழப்பாவூர், செங்கோட்டை, தென்காசி போன்ற 493 ஊரகப் குடியிருப்புகளுக்கு கூட்டுக்குடிநீர் திட்டம் 626 கோடி மதிப்பில் செயல்படவுள்ளது. மேலும் ஊரகப் பகுதியில் குடிநீர் வழங்க ரூ.1120 கோடியில் திட்ட மதிப்பீடு செய்ப்பட்டு நிதிக்காக காத்துக் கொண்டிருக்கிறது. ஜல்ஜீவன் திட்டத்தில் ஒன்றிய அரசின் நிதி, மாநில அரசின் நிதி ஆகியவற்றைப் பெற்று, பற்றாக்குறை வந்தால் மீதி கடன்வாங்கித் தான் குடிநீர் திட்டத்தை நிறைவேற்ற முடியும். இதற்கும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. நிதிக்காக காத்திருக்கிறோம்.

இந்த அரசைப் பொறுத்தவரை அனைத்துத் திட்டங்களும் குறிப்பாக மகளிர் உரிமைத்தொகை, மகளிர் விடியல் பயணம், மாணவ, மாணவர்களுக்கு மாதம் ரூ.1000 எனத் தொடர்ந்து பல திட்டங்களை முதல்வர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார். ஆனால் எப்படியாவது இந்த ஆட்சியை அகற்ற வேண்டும் என்று பல்வேறு வழிகளில், சமூக வளைதளங்களில் அவதூறு பரப்பி வருகின்றனர். அவற்றையெல்லாம் முறியடித்து திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் உங்களுக்கான நல்லாட்சியை தொடர்ந்து வழங்குவார். அப்படிப்பட்ட முதலமைச்சர் அவர்களுக்கு என்றென்றும் நீங்கள் ஆதரவு அளிக்க வேண்டும். ஏழை எளிய, மக்கள் மகிழ்ச்சியோடும், மன நிறைவோடும் வாழ வேண்டும். என்பதுதான் நம் முதலமைச்சர் அவர்களின் எண்ணங்களும், சிந்தனைகளும், செயல்களும் ஆகும்.

இவ்வாறு அமைச்சர் கே.என். நேரு பேசினார்.

நிகழ்ச்சி நிறைவில் சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளர் (கூடுதல் பொறுப்பு)சே.நாகராஜன் நன்றி உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து புளியங்குடி நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டு கட்டப்பட்டுள்ள 74 கடைகள் கொண்ட காந்தி தனசரி அங்காடி கட்டிடத்தினை அமைச்சர் கே.என் நேரு துவக்கி வைத்தார்.

அதன் பின்னர் வாசுதேவநல்லூர் பேரூராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்திற்கு ரூபாய் 1.08 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நவீனமயமாக்கப்பட்ட பேருந்து நிலையத்தினையும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அமைச்சர் கே.என். நேரு துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வுகளில் நெல்லை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் பெ.விஜயலட்சுமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ச.தங்கவேலு, பரமகுரு, மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் செண்பக விநாயகம், மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர் வசந்தம் ஜெயக்குமார், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் முத்துச்செல்வி,

பொதுக்குழு உறுப்பினர்கள் பராசக்தி, மாரிசாமி, பத்திரம் சாகுல் ஹமீது, ஒன்றியச் செயலாளர்கள் லாலா சங்கர பாண்டியன், கடற்கரை, பெரியதுரை, சேர்ம துரை, வெள்ளத் துரை, கிறிஸ்டோபர், பால்ராஜ், ராமச் சந்திரன், நகரச் செயலாளர்கள் மு.பிரகாஷ் (சங்கரன்கோவில்)அந்தோணிச்சாமி (புளியங்குடி) புளியங்குடி நகர்மன்ற தலைவர் விஜயா சௌந்தரபாண்டியன், முன்னாள் ஒன்றிய குழு தலைவர் அன்புமணி கணேசன், அணி அமைப்பாளர்கள் பிச்சையா, உதயகுமார், நாகூர் கனி, சிவசங்கரி, தொ.மு.ச. மைக்கேல், செல்வக்குமார், மகாராஜன், கழக மூத்த முன்னோடிகள் முட்டை சுப்பையா, முனியசாமி, வசந்தம் சுப்பையா, சோம செல்வபாண்டியன், புளியங்குடி நகராட்சி ஆணையாளர் சாம்கிங்க்ஸ்டன், உள்பட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலு வலர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

ஆக மொத்தம் ரூபாய் 14.08 கோடி மதிப்பீட்டில் திட்டப் பணிகள் மக்கள் பயன்பாட்டிற்காக கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. இதுதான் திராவிட மாடல் ஆட்சியாகும்.



வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் நேற்று (13.05.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல், வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகத்தின் முன்னெடுப்புகள், செயல்பாடுகள் மற்றும் அறிவிப்புகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மைத் துறை இயக்குநர் பி.முருகேஷ், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆணையர் த.ஆபிரகாம், சர்க்கரைத் துறை இயக்குநர், த.அன்பழகன், தமிழ்நாடு நீர்வடி பகுதி மேம்பாட்டு முகமை துணை தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஏ.பி.மகாபாரதி, தலைமைப் பொறியாளர் ஆர். முருகேசன், தலைமை பொறியாளர் சந்திரசேகர், தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல், வேளாண்மை ஏற்றுமதி ஊக்குவிப்பு கழக மேலாண்மை இயக்குநர், தலைமைச் செயல் அலுவலர் கோ.அழகுசுந்தரம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம், எப்போதும் வென்றானில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட மோட்டார் வாகனங்களை 40 மாற்றுத் திறனாளி பயனாளிகளுக்கு தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி எம்.பி., வழங்கினார். உடன், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன், சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, ஒன்றியச் செயலாளர் காசிவிஸ்வநாதன், கூடுதல் ஆட்சியர் ஐஸ்வர்யா, எப்போதும் வென்றான் ஊராட்சி மன்றத் தலைவர் முத்துக்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், இளைஞர் அணி மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து, கீழ்காணும் சட்டமன்றத் தொகுதிகளில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. அதன் விவரம் வருமாறு:

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 15.05.2025 | திண்டுக்கல் கிழக்கு | ஆத்தூர் | அகரம், தாடிக்கொம்பு பேரூராட்சி. | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, செல்வக்குமார் |
| 2 | 16.05.2025 | திண்டுக்கல் மேற்கு | ஒட்டன்சத்திரம் | கள்ளிமந்தையம் | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, மில்லர் மண்டேலா |
| 3 | 17.05.2025 | வேலூர் | வேலூர் | அண்ணா கலையரங்கம் அருகில் | வழக்கறிஞர் தாயகம் கவி, எம்.எல்.ஏ., ரிஷி சந்தோஷ் |
| 4 | 18.05.2025 | வேலூர் | குடியாத்தம் | பேரணாம்பட்டு பேருந்து நிலையம் அருகில் | மாண்புமிகு கோவி.செழியன், ம.ஜ.சந்தீப் |
| 5 | 18.05.2025 | நீலகிரி | உதகை | கூக்கல்தொரை | மருத்துவர் ப.மீ.யாழினி, சி.கா.சுகன்மந்த்ரன் |

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

இராமநாதபுரம் மற்றும் சென்னை வடகிழக்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 15.05.2025 வியாழக்கிழமை | காலை 10.00 மணி | இராமநாதபுரம் | பீமாஸ் வைஸ்ராய் ஹால், பாரதி நகர், இராமநாதபுரம். |
| 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணி | சென்னை வடகிழக்கு | டி.கே.பி திருமண மாளிகை, திருவொற்றியூர், சென்னை–19. |

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல் கீழ்க்கண்ட 6 சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் சமூக வலைத்தளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 17.05.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | எழும்பூர் | அறிஞர் அண்ணா மாளிகை, சச்சிதானந்தம், 2–வது தெரு, கொசப்பேட்டை, சென்னை–12. |
| 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணி | வில்லிவாக்கம் | டபிள்யூ.பி.ஏ.சவுந்திர பாண்டிய நாடார் பள்ளி வளாகம், என்.எம்.கே.தெரு, அயனாவரம், சென்னை–23. |
| | | திருவொற்றியூர் | டி.கே.பி திருமண மாளிகை, திருவொற்றியூர், சென்னை–19. |
| 19.05.2025 திங்கள்கிழமை | மாலை 4.00 மணி | விருகம்பாக்கம் | கோல்டன் பேரடைஸ் திருமண மண்டபம், சாலிகிராமம், சென்னை–93. |
| 20.05.2025 செவ்வாய்க்கிகிழமை | மாலை 4.00 மணி | மதுரவாயல் | ஸ்ரீ ராஜலட்சுமி மகால், 4, பிள்ளையார் கோயில் தெரு, ஆற்காடு சாலை, கணபதி நகர், போரூர், சென்னை–116. |
| | மாலை 4.00 மணி | அம்பத்தூர் | கே.எஸ்.பி. மகால், 12, காமராஜர் சாலை, கோபால் நாயக்கர் நகர், பாடி, சென்னை–50. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 12-05-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி